இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 288 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 15 – வியாழக்கிழமை 29 மே 2025 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 288 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 15 - Thursday 29 May 2025 - Chennai 12 Pages ₹ 5.00

## தி.மு.க.வின் குரலால் இலங்கைச் சிறையிலிருந்து 1,354 மீனவர்கள் மீட்பு! – தொடரும் இன்னல்களைப் போக்க

# மீனவர்களுக்கு ஒரே தீர்வு கச்சத் தீவை மீட்பதுதான்!

## திருவொற்றியூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நல உதவிகளை வழங்கி உறுதிமிகு உரை!

**சென்னை, மே 29-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.05.2025) சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவொற்றியூர் சூரை மீன்பிடி துறைமுகம் உள்ளிட்ட முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-**

.

272 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 3 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய 400 'கில் நெட்' படகுகள் 250 ஃபைபர் படகுகள் நிறுத்தும் வசதியோடு, 60 ஆயிரம் டன் மீன்களை கையாளக் கூடிய வசதிகளுடன் இருக்கும், இந்த சூரை மீன்பிடித் துறைமுகத்தை திறந்து வைத்து, உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமைப்படுகிறேன்!

**தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகளை நிலைநாட்ட நடவடிக்கை!**

கடின உழைப்பால், தியாகத்தால், நம்முடைய பண்பாட்டின் ஒரு அடையாளமாக இருக்கக்கூடிய மீனவத் தோழர்களின் வளர்ச்சிக்கு, இந்த துறைமுகம் பெரும் வாய்ப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். சென்னையின் வளர்ச்சியில் பழவேற்காட்டிலிருந்து கோவளம் வரைக்கும் மீனவ கிராமங்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது! இப்படிப்பட்ட மீனவர்களின் நலனையும், வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பது என்பது நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டை காப்பதற்கு சமம்! அந்தக் கடமையை நம்முடைய திராவிட மாடல் அரசு சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது!

மீனவர்களின் நலனைக் காப்பதோடு, நம்முடைய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறோம்! அதனால்தான், கடந்த ஏப்ரல் 2ஆம் நாள் சட்டமன்றத்தில், கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று தனித் தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறோம். கச்சத்தீவை மீட்பது தான் தமிழ்நாட்டு மீனவர்களின் இன்னல்களுக்கு அது நிரந்தர தீர்வாக அமையும்!

**நமது மீனவர்களுக்காக 76 முறை பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன்!**

கடந்த நான்காண்டுகளில், 97 நிகழ்வுகளில், 185 படகுகளும், ஆயிரத்து 383 மீனவர்களும், இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு இருக்கிறார்கள்! சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க வேண்டும்; படகுகளை மீட்க வேண்டும் என்று இந்தியப் பிரதமருக்கும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும், இதுவரைக்கும் எத்தனை கடிதங்கள் எழுதியிருக்கிறேன் என்று சொன்னால், 76 கடிதங்களை நான் எழுதியிருக்கிறேன். அதுமட்டுமல்ல, நேரில் சந்திக்கும் போதெல்லாம் தொடர்ந்து நான் வலியுறுத்திக் கொண் டிருக்கிறேன். அதேபோல, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும், கூட்டணி எம்.பி. களும் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி உரிமைக்குரலை எழுப்பிய காரணத்தால் தான், இதுவரைக்கும் ஆயிரத்து 354 மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்!எஞ்சிய 29 மீனவர்களையும் மீட்டு, தாயகம் அழைத்துகொண்டு வருவதற்கான தொடர் நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்! இந்த நிலையிலும், 2018ஆம் ஆண்டு முதல் சிறைபிடித்த 229 படகுகளை இலங்கை அரசு இதுவரைக்கும் விடுவிக்கவில்லை. ஒருபக்கம் அவற்றை மீட்பதற்கான அரசியல் போராட்டத்தை நாம் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தாலும், இதனால், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது என்று மயிலாடுதுறை, நாகப்பட்டினம்,

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்





"எளிமை ஆளுமை"
திட்டம் தொடக்க விழா
அரசுச் சேவைகளை எளிதாக்குதல்

பொதுமக்களுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் அரசால் வழங்கப்படும் சேவைகளுக்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தி உடனுக்குடன் வழங்குதல்.

தலைமை
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வழங்கப்படும் சேவைகள்
- சுகாதாரச் சான்றிதழ்
- பொதுக் கட்டட உரிமம்
- பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமம்
- மகளிர் இல்லங்களுக்கான உரிமம்
- புன்செய் நிலங்களை விவசாயம் அல்லாத செயல்பாட்டிற்குப் பயன்படுத்த தடையின்மைச் சான்றிதழ்
- சொத்து மதிப்புச் சான்றிதழ்
- முதியோர் இல்லங்கள் உரிமம்
- வெள்ளைவகை தொழிற்சாலைகள் பட்டியல் விரிவாக்கம்
- நன்னடத்தைச் சான்றிதழ்
- அரசு ஊழியர்கள் கடவுச்சீட்டுப் பெறுவதற்கான தடையின்மைச் சான்றிதழ்

திட்டத்தின் சிறப்பம்சங்கள்
- வெள்ளைவகை தொழிற்சாலைகள் பட்டியல் 609ஆக உயர்த்தப்படுகிறது
- உரிமங்களுக்கான காலவரையறையை நீட்டித்தல்
- நம்பிக்கை அடிப்படையில் சுயச் சான்றிதழ்
- தனி சார்பு அமைப்பின் சான்றிதழ்
- இணையதளம் மூலமாக விரைவான ஒப்புதல்கள்
- தொழில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள்
- இணைய சரிபார்ப்புகள்
- எளிய நடைமுறை, அனைவருக்கும் பயன்

பொதுமக்களையும் தொழில் நிறுவனங்களையும் மையப்படுத்திய சேவைகளைத் துரிதப்படுத்தவும் தாமதமில்லாமல் வழங்குவதற்கும் இத்திட்டம் செயல்படும்.

எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் அணுகலாம்

வாருங்கள்... எளிமையாக்கப்பட்ட நடைமுறைகளின் தொடக்கத்தைக் காண்போம்!

செ.ம.தொ.இ./538/வரைகலை/2025

நாள் : 29.5.2025, வியாழக்கிழமை, நேரம் : காலை 10.30 மணி, இடம் : தலைமைச் செயலகம், சென்னை

எல்லார்க்கும் எல்லாம்!

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 600 009.